கலைஞர்...

திருவாரூர் கலைஞர் கோட்டத் திறப்பு விழாவில் நடந்த கலைஞர் நூற்றாண்டுக் கவியரங்கில் கவிஞர் கபிலன் பாடிய கவிதை:



கவிஞர் கபிலன்

எதுகைக்கும் மோனைக்கும்
பிறந்த எழுத்தாணி

பிள்ளையார் சுழிபோடாத
உன் பிறப்புக் கடிதம்

முள்கிரீடங்களை
பேனா முள்ளாய்
மாற்றிக்கொண்டவர்

சிலுவை மரத்தில் அறைந்தாலும்
வாழை மரமாய் வளர்ந்தவர்

வேகத்தடைகளை
வெற்றிகொண்ட
பகுத்த றிவுப் பாதம்

கடன் பிறப்புகளை எல்லாம்
தள்ளுபடி செய்து
உடன்பிறப்பாய் மாற்றியவர்!

கலைஞரின் பேனா கத்தி
காய்கறி அறுப்பதல்ல
அது -
அறிவு சிகிச்சைக்குத்தான்
அதிகம் பயன்பட்டது

அவர் குழந்தைபோல கயிறுகட்டி
குளிக்கும்
குளத்து தாமரை அல்ல
திரை கடலையே கலங்கடிக்கும்
திராவிடத் திமிங்கலம்

கனவுகள் தேவையென்று
அதிகம் தூங்காதவர்

அண்ணாவை கொடியில் வைத்து
வாலாட்டாமல்
மடியில் வைத்து தாலாட்டியவர்!

காற்றாடிகளுக்கு மத்தியில்
காக்கைச் சிறகு

பெரியார் அண்ணா என்னும்
இரண்டு கரைகளைப்
பிடித்துக்கொண்டு
ஓடிய
நாத்திக நதி

செம்மொழியை வரவேற்று
சிவப்புக் கம்பளம்

நட்சத்திரங்களை
நட்டுவைத்தப் பற்கள்

நளவெண்பா நாக்கு

அய்யாவின் வெண்தாடியில்
நெசவு நெய்து
வேட்டிச் சட்டை அணிந்தவர்

அவர்
இடுப்பில் கட்டியிருப்பதும்
அண்ணாகயிறு
அவர் வெள்ளை செருப்பு
சூரியனை சுமக்கும் நிலவு!

தமிழர்களை அடைகாக்கும்
இரண்டுகால் மண்டபம்

கலைஞர்-
ஒருவரி ஆத்திச்சூடி
இரண்டுவரி திருக்குறள்
மூன்றுவரி ஹைகூ
நான்குவரி வெண்பா
அய்ந்து முறை முதல்வர்
அறுசீர் விருத்தம்
எழுசீர் கழி நெடிலடி
எண்சீர் யாப்பு
ஒன்பான் சுவை
பத்துப்பாட்டு

இந்தப் பத்தையும் வென்றெடுத்த
பத்துத் தலை ராவணன்
கலைஞர்

நாடக காலமுதல்
ஊடக காலம் வரை
அகநூலை முகநூலில் எழுதியவர்!

எந்தத் தூண்டிலுக்கும்
சிக்கிக் கொள்ளாத
புத்தகப் புழு

புன்னகை அலைவீசும்
பூம்புகார் கடற்கரை

கடல் குதிரையில் பயணிக்காத
கரிகால் சோழன்

பாலைவனத்தில் ஒரு
தண்ணீர்ப் பந்தல்

கலைஞர்-
பிள்ளை இல்லாத அவ்வைக்குப்
பேரப்பிள்ளை

கலைஞருக்குப் பிடித்தது
வள்ளுவனின் எழுத்தாணி
கண்ணகியின் திருகாணி
மாதவியின் மருதாணி
தண்டவாளமே தலகாணி
பிடிக்காதது -
நாட்டை ஆட்டை போடும்
அம்பானி அதானி

கலைஞர் -

கரகரத்த மொழியால் வரைந்த
குறளோவியம்

பஞ்சமனை தீர்ப்பு எழுதவைத்த
நெஞ்சுக்கு நீதி

கோட்டையின்
கொடிகாத்த குமரன்
நேற்று
நடிகரை நாடாள வைத்தவர்
நாளை - ஒரு
நடிகரையும் நாடாள வைப்பவர்!

திருக்குறளால் செய்த
தின்பண்டம்

அண்ணாவை உடுத்திக்
கொண்ட
காஞ்சிப்பட்டு

எங்கள் -
மனப்பாடப்பகுதிப் புத்தகத்தின்
மயிலிறகு

முத்தத்தால் செய்த குழந்தை
முழுமையாய் வாழ்ந்த முதுமை

கடைசிக்காலத்தில்
எங்கள்
தாய்த்தமிழ்
வாய்ப்பேசாமல் போனதால்

கண்ணீர் மழையில்
கழகம் நனைந்தது

இலையுதிர்கால மரம்
உயிருள்ள எலும்புக்கூடு
உடலில்லாத கலைஞர்
உயிருள்ள தளபதி...

தஞ்சாவூர் சிலை நகரைத்
தலைநகராய்க் கொண்டவனே

அஞ்சுகத்தாய் அடிவயிற்றில்
கொடிமரமாய் இருந்தவனே

திருக்குவளை மண்மீது
திருக்குறளாய் பிறந்தவனே

சூல்கொண்ட பூவுக்குள்
சூரியனாய் வளர்ந்தவனே

முன்னூறு நாள் சுமந்து
முப்பாலைப் பாலூட்டி

புறம்படுக்க வைக்காமல்
புறநூறு தாலாட்டி
ஈவெரா பேரனுக்கு
ஆராரோ பாடவைத்து

அஞ்சுகத்தாய் மடிமீது
அரிச்சுவடாய் தூங்க வைத்தாய்

தஞ்சை காவிரிமண் பிறந்த நதி
சென்னை காவிரியில்
முடிந்ததம்மா.

மன்னாதி மன்னனுக்கு
மரணத்திலும் தமிழ் மணக்க

பூவாசம் மேனியெங்கும்
புத்தகமாய் விரிந்திருக்க

வெண்ணிலவை நெசவு செய்து
வேட்டிசட்டை அணிந்திருக்க

கருப்பு சிவப்பு கரை இரண்டும்
கால் நகத்தின் கண்துடைக்க

ஆனாலும் அவன் இதயம்
பேனாவை சுமந்திருக்க

கண்மூடும் கண்ணிரண்டை
கண்ணாடி மறைத்திருக்க

கோபால புரத்திலன்று
பூபாளம் ஒலிக்கவில்லை

ஆகாய விண்மீன்கள்
அதிகாலை மறையவில்லை

அன்று பிறந்த குழந்தைகூட
அவனுக்காய் அழுததம்மா

வங்கக்கடல் சூரியனோ
வருத்தமாய் உதித்ததம்மா

மீனழுத கண்ணீரால்
கடல் நீரே கர்ப்பமாச்சி

அனைத்துசாதி பறவைக்கும்
ஆலமரம் நீதானே

அரசியல் புத்தகத்தின்
அட்டைப்படம் நீதானே

வசனத்தால் பலபேரை
வளர்த்தவன் நீதானே

உன் பேனாவின் முள்ளுக்கும்
பேரறிஞர் சொல்லுக்கும்

ஒற்றுமை ஒன்றுஎன
ஊரே சொன்னதய்யா

வீட்டிலிருந்து வாசல் வரை
வீறுநடை கொண்டவனே

கழகப் பரம்பரைக்கு
கைகுலுக்கிச் சென்றவனே

அரசாங்கப் பல்லக்கில்
அணிவகுத்துச் செல்கையிலே

தெருவோரம் இருபுறமும்
தேங்கிநின்ற மக்களுக்கு
முத்தமிழர் ஊர்வலத்தால்
முகமெல்லாம் ஈரமாச்சி
இருக்கின்ற ஓர் இதயம்
இமயமலை பாரமாச்சி
தனியொருவன் உனைமட்டும்
தமிழ்நாடே வழியனுப்ப
வள்ளுவர் கோட்டத்தில்
வள்ளுவனும் கண்கலங்க
தொல்காப்பிய பூங்காவே
மலர் வளையமாகிவிட
ராஜாஜி படிக்கட்டில்
கொடிக் கட்டிப் படுத்திருக்க
சுற்றங்களின் கண்ணீரால்
சூரியனே நனைந்ததய்யா
ஆத்தாவின் பிள்ளையெல்லாம்
தாத்தாவென தவிக்குதய்யா.

பட்டிதொட்டி முழுவதும்
பசிமறந்த துயரமாச்சி
கிட்ட தட்ட பூமாலை
தொட்ட பெட்டா உயரமாச்சி

அண்ணாவில் தொடங்கி
அண்ணாவில் முடிந்த
தென்னாட்டுத் தலைவனை
தெரியாத உலகமில்லை

கடைசியாய் ஒரு தலைவன்
கண்மூடிப் போனதனால்

காகித ஓடமொன்று
கண்ணீரில் மிதக்குதய்யா

குண் டுகள் வான் முழங்க
குலத்தலைவன்
தலை புதைந்தான்

யார் இறந்தாலும்
பூமியில் புதைப்பார்கள்
நாம்
ஒரு பூமியையே
புதைத்துவிட்டோம்!

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (22.6.2023) தலைமைச் செயலகத்தில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டையொட்டி சென்னையில் உலகத்தரம் வாய்ந்த கலைஞர் நூற்றாண்டு பன்னாட்டு அரங்கம் அமைப்பது தொடர்பாக ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் க. மணிவாசன், நிதித்துறை முதன்மைச் செயலாளர் த. உதயச்சந்திரன், பொதுப்பணித் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பி. சந்தரமோகன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னை கலைவாணர் அரங்கத்தில், நேற்று முன்தினம் (22.06.2023) நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, அனைத்து மாநகராட்சி ஆணையாளர்கள், நகராட்சி ஆணையாளர்கள், பேரூராட்சி செயல் இயக்குநர்களுக்கு, தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 மற்றும் விதிகள், 2023 தொடர்பான பயிலரங்கத்தினை தொடங்கி வைத்து, தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்ட விதிகள் தொகுப்பினை பயிற்சி பெறும் அலுவலர்களிடம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர்/அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ.இராதாகிருஷ்ணன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் இரா.கிர்லோஷ் குமார், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் வி.தட்சிணாமூர்த்தி, பேரூராட்சிகள் இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிருவாக இயக்குநர் ப.பொன்னையா மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

நகர்ப்புற உள்ளாட்சி அலுவலர்கள் - உள்ளாட்சி பிரதிநிதிகள் ஒருங்கிணைந்து

பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பணியாற்றிட வேண்டும்!

நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அறிவுறுத்தல்!

சென்னை, ஜூன் 24- நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் அலுவலர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளுடன் ஒருங்கிணைந்து பொதுமக்கள் பயன் பெறும் வகையில் பணியாற்றிட வேண்டும் என்று சென்னையில் நடைபெற்ற ஆணையாளர்கள், நகராட்சி ஆணையாளர்கள், பேரூராட்சி செயல் இயக்குனர்களுக்கான தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் கூட்டத்தில் நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு அறிவுறுத்தினார்.

நேற்று முன்தினம் (22.06.2023) நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, சென்னை கலைவாணர் அரங்கத்தில் அனைத்து மாநகராட்சி ஆணையாளர்கள், நகராட்சி ஆணையாளர்கள், பேரூராட்சி செயல் இயக்குநர்களுக்கு, தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகள் (திருத்தம்) சட்டம், 2022 மற்றும் விதிகள், 2023 தொடர்பான பயிலரங்கத்தினை தொடங்கி வைத்தார்கள்.

இக்கூட்டத்தில் அமைச்சர் கே.என்.நேரு பேசியதாவது:-

தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998க்கான (திருத்தம்), 2022 சட்டம் 11 பகுதிகளாகவும் மற்றும் தமிழ்நாடு நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளுக்கான விதிகள் 2023, 13 பகுதிகளாகவும் பிரிக்கப்பட்டு உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளுக்கான அனைத்து வரன்முறைகளும் உள்ளடக்கியதாக வகுக்கப்பட்டுள்ளது.

இவற்றில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான வார்டு எல்லை வரையறைகள், தேர்தல் விதிமுறைகள் மற்றும் உள்ளாட்சி மன்றங்கள் செயல்படுவதற்கான சட்டம் மற்றும் விதிமுறைகள், உள்ளாட்சி அமைப்புகளுக்கான நிதிப் பங்கீடு, உள்ளாட்சி அமைப்புகளின் வரி வருவாய், உள்ளாட்சி அமைப்புகளால் வழங்கப்படுகின்ற பல்வேறு உரிமங்கள் ஆகியவற்றிற்கான விதிகள், உள்ளாட்சி அமைப்புகளின் பணியாளர்களுக்கான விதிமுறை கள், விளம்பர பலகைகள் மற்றும் பதாகைகள் ஆகியன உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைக்குள் நிறுவப்படுவதற்கான விதி முறைகள், கட்டட விதிமுறைகள், குடிநீர் மற்றும் கழிவுநீர் மேம்பாட்டு செயல்பாடுகள் குறித்த சட்டங்கள் மற்றும் விதிமுறை கள், பொது சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மைக்கான சட்டம் மற்றும் விதிமுறைகள், கசடு கழிவு மேலாண்மைக்கான சட்டம் மற்றும் விதிமுறைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாட்டிற்கென நிறைவேற்றப்படக்கூடிய துணை விதிகள் ஆகியன குறித்து அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் அலுவலர்கள் மற்றும் பணியாளர்களுக்கு மிகத்தெளிவாக எடுத்துரைக்கப்பட உள்ளது.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்படும் அனைத்து பணிகளும் சட்ட விதிகளுக்கு உட்பட்டு செயல்படுத்தப்பட வேண்டும். நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள் தமிழ்நாடு அரசிற்கு பெருமை சேர்க்கும் வகையிலும், பொதுமக்களின் பாராட்டுதல்களை பெறும் வகையில் இருக்க வேண்டும். அரசின் அனைத்து திட்டங்களும் சரியான வகையில் பொதுமக்களை சென்றடைய வேண்டும். நகராட்சி நிருவாகத் துறையில் பணியாற்றும் அலுவலர்கள் இதற்காக எந்தவித சமரசமும் இல்லாமல் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அலுவலர்களுக்குத் தேவையான அனைத்து ஒத்துழைப்பினையும் நகராட்சி நிருவாகத் துறை நிச்சயமாக வழங்கும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்காக அதிக நிதி ஒதுக்கீடு வழங்கியுள்ளார்கள். சுமார், 16 ஆயிரம் கோடி பல்வேறு திட்டங்களுக்காக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் வழங்கப்பட்டுள்ளது. இது மட்டுமின்றி, கூடுதலாக குடிநீர் திட்டப் பணிகள், கழிவுநீர் கட்டமைப்புகள் உருவாக்குதல் போன்றவைகளுக்காக தனியாக நிதி ஒதுக்கீடும் அளித்துள்ளார்கள். எனவே, வழங்கப்பட்ட நிதி ஆதாரங்களைக் கொண்டு உரிய சட்ட விதிகளின் கீழ் அனைத்து பணிகளையும் அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள் அனைத்தும் உரிய நடைமுறைகளைப் பின்பற்றியே இருக்க வேண்டும். இதற்காக உரிய சட்ட விதிகள் கொண்டு வரப்பட்டுள்ளது. இதை அனைவரும் சரியான புரிதலோடு செயல்படுத்த வேண்டும். நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் பணியாற்றும் அனைத்து நிலை அலுவலர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகளோடு ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும். அப்பொழுதுதான் அரசினுடைய நோக்கமும், திட்டங்களும் பொதுமக்களை சரியாக சென்றடையும். இதை அனைவரும் கடைபிடிக்க வேண்டும். இச்சட்ட விதிமுறைகள் கடந்த 10 மாதங்களாக தயாரிக்கப்பட்டு சட்டத்துறையின் அனுமதி பெற்று வெளியிடப்பட்டுள்ளது. இதில் ஏற்படும் சந்தேகங்களைத் தீர்ப்பதற்காக குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவின் அறிக்கைகளை 3 மாத காலத்திற்குள் அரசிற்கு சமர்ப்பித்திட அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இச்சட்ட விதிகளை பார்வையிட்ட பிற மாநிலத்தினர்கள் பாராட்டி வருகின்றார்கள். இதன் மூலம் நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகள் சிறப்பாக இருக்க வேண்டும் என்பதற்காக இப்பயிற்சி 21 மாநகராட்சி ஆணையாளர்கள், 138 நகராட்சி ஆணையாளர்கள், 490 பேரூராட்சி செயல் அலுவலர்கள், நகராட்சி நிர்வாகத்தின் மண்டல இயக்குநர்கள், மண்டல செயற்பொறியாளர்கள், மாநகராட்சி, நகராட்சி தலைமைப் பொறியாளர்கள் மற்றும் பேரூராட்சிகளில் உள்ள பொறியாளர்களுக்கு வழங்கப்படுகிறது. இப்பயிற்சியில் வழங்கப்படும் விவரங்களை நடைமுறைப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அலுவலர்கள் மேற்கொள்ள வேண்டும்.

நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்பு வதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக, 10 ஆயிரம் பொறியாளர்களை நியமிப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், நகர்ப்புர உள்ளாட்சி அமைப்புகளின் செயல்பாடுகளை மேம்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் தமிழ்நாடு அரசு எடுத்து வருகிறது. இதற்கு அனைத்து அலுவலர்களும் ஒத்துழைப்பு வழங்கி அரசின் செயல்பாடுகளுக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென கேட்டுக் கொண்டார்.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர், அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் மரு.ஜெ.இராதாகிருஷ்ணன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் இரா.கிர்லோஷ் குமார், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் வி.தட்சிணாமூர்த்தி, பேரூராட்சிகள் இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிருவாக இயக்குநர் ப.பொன்னையா மற்றும் அனைத்து மாநகராட்சி, நகராட்சி ஆணையாளர்கள், பேரூராட்சிகளின் செயல் அலுவலர்கள், பொறியாளர்கள் உள்பட பல்வேறு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

சென்னையிலிருந்து புறப்பட்ட

ரயிலில் திடீர் தீ விபத்து!

சென்னை, ஜூன் 24- சென்னையில் இருந்து மும்பை நோக்கிச் சென்ற லோக்மான்ய திலக் ரயில் பேசின் பிரிட்ஜ் அருகே சென்ற போது என்ஜினிலிருந்து எழுந்த புகை மூட்டத்தால் ரயில் நடு வழியிலேயே நிறுத்தப்பட்டது. ரயிலிலிருந்து பயணிகள் உடனடியாக வெளியேறியதால் பெரும் விபத்து தவிர்க்கப்பட்டது. தற்போது லோக்மான்ய திலக் அதிவிரைவு ரயில் பேசின் பிரிட்ஜ் மற்றும் வியாசர்பாடி ரயில் நிலையம் அருகே நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. உயர் அழுத்த மின் கம்பியில் ஏற்பட்ட உரசல் காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என்று தகவல் வெளியாகியுள்ளது.

"நடந்து வந்த நமது பாதையை ஒரு முறை
திரும்பிப் பார்த்துவிட்டு,
இனி நடக்க வேண்டிய
பாதையில் நிலையாகவும் தைரியமாகவும்
விரைந்து
முன்னேறுவோம் " என்று
ஒவ்வொருவரும் சூளுரை
மேற்கொண்டு பயணத்தைத் தொடர
வேண்டும்.

கடமையுணர்வோடு - கண்ணியத்தோடு - கட்டுப்பாடு உணர்வோடு அடக்கத்தோடு - ஆடம்பரமின்றி ஆர்வத்தோடு பணியாற்றினால் நம்மை யாராலும் அழிக்க முடியாது.

...கழகக் காவலர்
கலைஞர்.....